வேலூர் மாவட்டம் காட்பாடியில், கழக பொதுச் செயலாளர், நீர்வளம், சட்டமன்றம் மற்றும் சட்டத்துறை அமைச்சர், துரைமுருகன் அவர்கள் முன்னிலையில் கே.வி.குப்பம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் எல்.ரவிச்சந்திரன் தலைமையில் புதிய நீதிக்கட்சி கே.வி.குப்பம் ஒன்றிய கழக செயலாளர் எம். அபிஷேக் மற்றும் அவருடன் 25க்கும் மேற்பட்டோர் அக்கட்சி யிலிருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு, வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கழகத் துண்டு அணிவித்து வரவேற்றார். இந்த நிகழ்வின்போது கே.வி.குப்பம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.சீதாராமன், மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை செயலாளர் சி.கோபி, ஒன்றியக் குழு துணை தலைவர் எம்.வெங்கடேசன் மாவட்ட பிரதிநிதி ஜி.இளங்கோ, கருணாகரன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தூயவன் மற்றும் பலர் உடனிருந்தனர்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி இராணிப்பேட்டை சிப்காட் தொழில் வளாகம்1. 2 வது மெயின் சாலையில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், சிப்காட் மூலம் சிப்காட் போகி எனப்படும் விரிவான தூய்மைப் பணி இயக்கத்தை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு. சந்திரகலா. சிப்காட் திட்ட அலுவலர் கலைச்செல்வி. மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, வாலாஜா தெற்கு ஒன்றிய செயலாளர் பத்மநாபன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில்

837 பயனாளிகளுக்கு ரூ.20.54 கோடி மதிப்பில் விலையில்லா வீட்டுமனை பட்டாக்கள்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

சேலம், ஜன.11-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் 09.01.2026 அன்று சேலம், ஓமலூர் வட்டம், எம்.ஆர்.பி முத்து மஹால் மற்றும் கோரிமேடு சுபம் திருமண மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 837 பயனாளிகளுக்கு ரூ.20.54 கோடி மதிப்பில் விலையில்லா வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார். பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்புடன் ரூ.3,000 வழங்கும் பணியினை தொடங்கி வைத்துள்ளார்கள். மேலும், மகளிர் உரிமைத்தொகை, விடியல் பயணத்திட்டம், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு சிறப்புத் திட்டங்களை அறிவித்து அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த 12.06.2025 அன்று சேலம் மாவட்டத்திற்கு வருகை புரிந்தபோது பயனாளிகளுக்கு சுமார் 80,000 பட்டாக்கள் வழங்கி சிறப்பித்தார்கள். அதே போன்று, சேலம் மாவட்டத்தில் நான்கரை ஆண்டுகளில் ரூ.7,660 கோடி மதிப்பீட்டிலான வளர்ச்சி திட்டப் பணிகளும், ரூ.22,117 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஓமலூரில் கூடுதல் அரசு மருத்துவமனை கட்டடம், காடையாம்பட்டியில் வேளாண்மை இடுபொருள் கிடங்கு, சார்பதிவாளர் அலுவலகம் ஆகியவை அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்கள். காடையாம்பட்டி பகுதியில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் பல்வேறு பயனாளிகள் வீடுகள் பெற்று பயன் பெற்றுள்ளனர்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்தில் உள்ள 5,241 மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு ரூ.133 கோடி மதிப்பீட்டிலான கடன் தள்ளுபடியும், பொதுமக்களுக்கு கூட்டுறவு வங்கிகளில் வைக்கப்பட்டிருந்த நகைக்கடன் ரூ.484 கோடி தள்ளுபடியும் செய்துள்ளார்கள்.

அதன் தொடர்ச்சியாக, இன்றைய தினம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்தைச் சேர்ந்த 339 பயனாளிகளுக்கு ரூ.3.29 கோடி மதிப்பில் விலையில்லா வீட்டு மனைப் பட்டாக்களும், காடையாம்பட்டி வட்டத்தைச் சேர்ந்த 137 பயனாளிகளுக்கு ரூ.51.35 இலட்சம் மதிப்பில் விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்களும், சேலம் மேற்கு வட்டம், கெட்டிச்சாவடி ஊராட்சியைச் சேர்ந்த 361 பயனாளிகளுக்கு ரூ.16.73 கோடி மதிப்பில் விலையில்லா வீட்டு மனைப் பட்டாக்களும் என மொத்தம் 837 பயனாளிகளுக்கு ரூ.20.54 கோடி மதிப்பில் விலையில்லா வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் அரசின் சார்பில் வழங்கப்படும் இந்நலத் திட்ட உதவிகள் பெற்ற பயனாளிகளுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

புதுச்சேரி மாநில

தி.மு.க. சார்பில் 5 தொகுதிகளில் சமத்துவப் பொங்கல்!

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா அறிக்கை!

புதுச்சேரி, ஜன.11-

புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில், புதுச்சேரி மாவட்டத்தில் உள்ள ஐந்து தொகுதிகளில் நடைபெறும் சமத்துவப் பொங்கல் விழாவில், தி.மு.க.-வினர் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்க வேண்டும் என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய வழியில், கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல் படி, தமிழ்ப் புத்தாண்டை வரவேற்கும் விதமாக, இந்த ஆண்டுக்கான சமத்துவப் பொங்கல் விழாவை, கதிர் காமம், உருளையன் பேட்டை, தட்டாஞ்சாவடி, பாகூர், வில்லியனூர் ஆகிய ஐந்து தொகுதிகளில் நடத்தப்படுகிறது.

அதன்படி, 11-ஆம் தேதி மாலை 4.00 மணிக்கு கதிர் காமம் தொகுதி தி.மு.க. செயலாளர் வடிவேல் ஏற்பாட்டில், மேட்டுப்பாளையம் அய்யப்பன் கோவில் திடலிலும், 12-ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு உருளையன்பேட்டை தொகுதி தி.மு.க. சார்பில், பொதுக்குழு உறுப்பினர் கோபால் ஏற்பாட்டில் ராஜா நகர்-முத்தமிழ் நகரிலும், 13.ஆம் தேதி தட்டாஞ்சாவடி தொகுதி திமுக சார்பில், தொகுதி பொறுப்பாளரும், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளருமான டாக்டர் நித்தீஷ் ஏற்பாட்டில், தட்டாஞ்சாவடி அய்யனார் கோவில் திடலிலும், 14-ஆம் தேதி காலை 7.30 மணிக்கு பாகூர் தொகுதி தி.மு.க. சார்பில், மாநில கழக பொருளாளரும், கழக சட்டமன்ற உறுப்பினருமான இரா. செந்தில் குமார் ஏற்பாட்டில் கீழ்பரிக்கல்பட்டு கிராமத்திலும், 14-ஆம் தேதி மாலை 04.00 மணிக்கு மாநில கழகம் சார்பில் எனது ஏற்பாட்டில் வில்லியனூர் தென் கோபுர வீதியில் ஏராளமான பெண்கள் பங்கேற்று நடத்தும் சமத்துவப் பொங்கல் விழா வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

முன்னதாக இன்று (11-ஆம் தேதி) காலை 09.00 மணிக்கு உருளையன் பேட்டை தொகுதி மற்றும் வில்லியனூர் தொகுதிகளில் பெண்கள் பங்கேற்கும் மாபெரும் கோலப்போட்டி விழா நடக்கிறது. மூன்று வகையான கோலப்போட்டியில் வெற்றி பெறும் பெண்களுக்கு 14-ஆம் தேதி நடைபெறும் சமத்துவப் பொங்கல் விழாவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

எனது தலைமையில் தமிழர் பண்பாடு, கலாச்சாரத்தை பறைசாற்றுகின்ற கிராமிய இசை, திரைப்பட பாடகர் சித்தன் ஜெயமூர்த்தி தலைமையிலான இன்னிசை நிகழ்ச்சி, மயிலாட்டம், ஒயிலாட்டத்துடன் மகளிர் பங்கேற்கும் இந்த சமத்துவப் பொங்கல் விழாவை, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர்கள் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., முனைவர் சபாபதி மோகன் ஆகியோர் தொடங்கி வைத்து, பொங்கல் விழாவில் பங்கேற்கும் பெண்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

இந்த விழாவில், தி.மு.க. மாநில நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், மொழிப்போர்த் தியாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சமத்துவப் பொங்கல் விழாவிற்கான ஏற்பாடுகளை தொகுதி செயலாளர்கள் இரா.சக்திவேல், க.ர.ஆறுமுகம், பாண்டு அரிகிருஷ்ணன், மணிகண்டன் ஆகியோருடன் கழக இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு, கலை, இலக்கிய பகுத்தறிவுத் பேரவை அமைப்பாளர் சிவசங்கரன் மற்றும் நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டக் கழக

முன்னாள் துணைச் செயலாளர் - கழக மூத்த முன்னோடி செ.கண்ணப்பன் மறைவு!

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.11-

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத்தின் முன்னாள் துணைச் செயலாளரும் கழக மூத்த முன்னோடியுமான செ.கண்ணப்பன் அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து விடுத்துள்ள செய்தி வருமாறு:

ஒன்றுபட்ட சென்னை மாவட்டக் கழகத்தின் முன்னாள் துணைச் செயலாளராகவும் மாவட்டக் கழகப் பொருளாளராகவும், சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவராகவும், கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பதவி வகித்த கழகத்தின் மூத்த முன்னோடி அண்ணன் செ.கண்ணப்பன் அவர்கள், நேற்று இயற்கை எய்தினார் எனும் செய்தி அறிந்து பெரிதும் வருந்துகிறேன்.

இளம் பிராயம் தொட்டு தான் ஏற்றுக் கொண்ட கொள்கையில் இருந்து சிறிதும் வழுவிடாது தீவிர கழகப் பணியாற்றியவர் அவர்.

கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல முறை சிறையேகியவர் ; கழகத்தின் அடுத்த தலைமுறை இளைஞர்கள் தீவிரமாகப் பணியாற்றுவதற்கு தூண்டுகோலாக இருந்து அவர்களை வழிநடத்தியவர் !

அவரது மறைவு கழகத்திற்கு இழப்பு எனில் அது மிகையல்ல !

அவரது மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி பெண்ணாடம் பகுதி நேர நியாய விலைக் கடையில் நேற்று (10.01.2026) ரூ.3000/ரொக்கம், ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு அடங்கிய "திராவிட பொங்கல்" தொகுப்பினை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கினார். உடன் நல்லூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் செம்பியன் மற்றும் பலர் உள்ளனர்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் காணொளி காட்சி வாயிலாக 'உங்க கனவ சொல்லுங்க' நிகழ்ச்சியை பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர். ஜெ.யு.சந்திரகலா. ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன். திட்ட இயக்குனர் மகளிர் திட்டம் செந்தில்குமரன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி.ஜெயந்தி திருமூர்த்தி. ஒன்றியக் குழு தலைவர்கள் திருமதி.புவனேஸ்வரி சத்தியநாதன். திருமதி.நிர்மலா சௌந்தர். நகரமன்ற தலைவர்கள் திருமதி.சுஜாதா வினோத். திருமதி.லஷ்மி பாரி. திருமதி.தேவி பென்ஸ் பாண்டியன். பேரூராட்சித் தலைவர்கள் திருமதி.கவிதா சீனிவாசன். திருமதி.லதா நரசிம்மன். துணைத் தலைவர் இராதாகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்செல்வம் மற்றும் மகளிர் சுய உதவி குழு பெண்கள் உள்ளனர்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு "திராவிட பொங்கல்" விளையாட்டு போட்டியாக குருந்தன்கோடு மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கிரிக்கெட் போட்டியானது லெட்சுமிபுரம் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வைத்து குருந்தன்கோடு மேற்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.பி.சந்திரா தலைமையில் நடைபெற்றது.சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கிரிக்கெட் போட்டியை துவக்கி வைத்து சிறப்பித்தார். நிகழ்ச்சியில் பேரூர் கழக செயலாளர்கள் வி.ராபர்ட் கிளாரன்ஸ், அ.சேவியர் ஏசுதாஸ், குருந்தன்கோடு மேற்கு ஒன்றிய துணை செயலாளர் ரமணிரோஸ், குருந்தன்கோடு மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஐ.சசி சுபாசிங், கழக நிர்வாகிகள் டேவிஸ் ராஜன், செல்வதாஸ், ஜான்லீபன், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திராவிடப் பொங்கல் 2026 "சமத்துவம் பொங்கட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்" விளையாட்டுப் போட்டிகள் கடலூர் மாநகர தி.மு.க. சார்பில் கடலூர் அண்ணா விளையாட்டு அரங்கில் ஆண்களுக்கான கால்பந்து போட்டிகள் நடைபெற்றது. கடலூர் மாநகர செயலாளர் கே.எஸ்.ராஜா தலைமை தாங்கினார். கடலூர் மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா போட்டியை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் பகுதி செயலாளர்கள் ப.நடராஜன், எஸ்.சலீம், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கே.எஸ்.ஆர்.பாலாஜி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அமைப்பாளர் சதீஷ்குமார், வழக்கறிஞர் கே.எஸ்.ஆர்.கார்த்திக் , கிளை செயலாளர் அரங்கநாதன், ஜெயசீலன், ரகுராமன், தகவல் தொழில்நுட்ப அணி பிரவின் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்கள் ,துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.